வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : CC 54 of 2020
வழக்கு சாட்சி – PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தர்மராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | டேனியல் | வயது | : | |
| கிராமம் | : | வடுகபாளையம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.
(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :**

**நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம்காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பபம் என்னுடையதுதான். கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் மாணிக்கபுரம் ரோட்டில் நான் கம்பெனியில் இருந்த போது சத்தம் கேட்டது நான் பார்த்தப்போது ஒரு பெரியவர் அடிப்பட்டு கிடந்தார். பின்னர் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நான் மற்றும் என்னுடன் பெண் கையொப்பம் செய்தார் அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. பார்வை மகஜர் அ.த.சா.ஆ,2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1) நான் சம்பவ சமயத்தில் எங்கு வேலை செய்தேன் என்றால் மணிபாரதி டெக்ஸ்டைல்ஸ். எனக்கு வேலை நேரம் எப்போது என்றால் காலை 9.00 –6.00 மணி வரை. நான் பணிக்கு செல்லும் போது கையொப்பம் போட வேண்டும் என்றால் நான் ஒப்பந்த பணியாளர் என்பதால் கையொப்பம் போட தேவையில்லை. எனக்கு என்ன வேலை என்றால் பீஸ் மடிக்கும் வேலை. நான் எவ்வளவு நேரம்

கழித்து சம்பவஇடம் வந்து பார்த்தேன் என்றால்சத்தம் கேட்டதும் நான் சென்று பார்த்தேன். நான் வந்து எவ்வளவு நேரத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் சுமார் ½ மணி நேரத்திற்குள்ளாக இருக்கும். அப்போது தான் என்னிடம் கையொப்பம் வாங்கனிார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நேரில் பார்த்ததற்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொன்ன நாள் நேர விதத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்பத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.01.27 11:13:39 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : CC 54 of 2020
வழக்கு சாட்சி – PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா கவுண்டர் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

( எதிரி ஆஜர்).

**முதல்விசாரணை :**

**நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளரகா பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.04.2019 ஆம் தேதி பல்லடம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக நிலைய அலுவலில் இருந்தபோது பல்லடம் அரசு மருத்துவமனையில் இருந்து திருமூர்த்தி என்பவரின் RTA intimation பேரில் பல்லடம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தப்போது அங்கு திருமூர்த்தி என்பவர் விபத்து ஏற்பட்டு மயக்கநிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி பாக்கியம்மாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று வந்து பல்லடம் காவல் நிலைய குற்ற எண்.476/2019 சட்டப்பிரிவுகள் 279,337 இதச –வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரினை இனைத்து கனம் நீதிமன்ற நடுவருக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் ரவி அவர்கள் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1) புகார்தாரர் பாக்கியம்மாள் நிலையம் வந்து புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். 03.05.2019 அன்று தான் அசல் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான் நான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து நிலைய பொறுப்பு அதிகாரியிடம் அன்றே ஒப்படைத்துவிட்டேன். அன்று நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 11:13:47 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : CC 54 of 2020
வழக்கு சாட்சி – PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியம் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

( எதிரி ஆஜர்).

**முதல்விசாரணை :**

**நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது உதவி ஆய்வாளரகா பணிபுரிந்து ஓய்வுபெற்று நாமக்கல் மாவட்டம்ராசிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.04.2019 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தலைமை காவலர் பழனிசசாமி என்பவரால் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 476/2019 சட்டப்பிரிவு 279,337 இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனிலக்காமல் 30.04.2019 ஆம் தேதி 19.30 மணிக்கு இறந்துவிட்டதாக 23.45 மணிக்கு போன் மூலம் கோவை அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் இருந்து கொடுத்த தகவலை பெற்று 01.05.2019 ஆம் தேதி 00.15 மணிக்கு இவ்வழக்கின் சட்டப்பிரிவான 279,337 இதவில் இருந்து 279,304(A) இதசவாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அ.த.சா.ஆ 4** ஆகும். பின்னர் அன்றே காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜோதிமணி மற்றும் தர்மராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ. 5** ஆகும்.

2) பின்னர் சாட்சிகள் கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு காலை 8.00 மணிக்கு சென்று வழக்கில் இறந்துபோன திருமூர்த்தி பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 8.00 மணி முதல் 10.30 மணி வரை பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ. 6** ஆகும். இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்காக பல்லடம் காவல் நிலைய முதல் நிலைய காவலர் 1545 நாகராஜ் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைத்தேன். சாட்சிகள் பாக்கியம்மாள், செல்வராஜ், ரமேஷ், ஜோதிமணி, தர்மராஜ், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் ரமேஷ்கண்ணன் என்பவர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர்என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) பார்வை மகஜர் சாட்சி தர்மராஜை சம்பவத்தின் மறுநாள் தான் விசாரித்தேன் என்றால் அடுத்த நாள் காலை தான் விசாரித்தேன். எனது விசாரணையில் பாக்கியம்மாள் மளிகை கடையில் ஜாமான் வாங்கிக்கொண்டிருக்கும்போது சத்தம் கேட்டு தான் விபத்து பற்றி தெறியும் என்று விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல அவர் விபத்தை கண்ணுற்றதாக சொல்லியுள்ளார். இந்த விபத்தை யாரும் நேராக பார்க்கவில்லை என்றும் நானே விபத்தை சாட்சி பாக்கியம்மாள் நேரில் கண்ணுற்றதாகவாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேர விதத்தில் எந்த சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் பிரேத விசாரணை அறிக்கை தயாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சொன்ன நாள் சொன்ன நேர விதத்தில் சம்பவ

இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் என்னால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 11:13:56 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.